| Headline | TNB Advise Public To Be Wary Of Suspicious Job Offers | | |
|---|---|---|---|
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 12 May 2016 | Language | Tamil |
| Circulation | 28,000 | Readership | 180,000 |
| Section | News | Page No | 7 |
| ArticleSize | 94 cm² | Journalist | N/A |
| PR Value | RM 957 | | |
| | | | |



# தனிநபர் மூலமாக வேலைக்கு ஆள் சேர்க்கவில்லை

## தெனாகா நேஷனல் அறிவிப்பு

கோலாலம்பூர், மே 12- வேலைக்கு ஆள் சேர்ப்பதற்காக தனிநபர் எவரையும் தாங்கள் நியமிக்கவில்லை என தெனாகா நேஷனல் பெர்ஹாட் அறிவித்துள்ளது. வேலைக்கு ஆட்கள் தேவை என தனிநபர் வெளியிடும் அறிவிப்புகளை நம்பி பொதுமக்கள் ஏமாற வேண்டாம் எனவும் தெனாகா நேஷனல் கேட்டுக் கொண்டுள்ளது.

தெனாகா நேஷனல் பிரதிநிதியாக தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் நபர் ஒருவர் பொதுமக்களிடமிருந்து ஏராளமான பணத்தை வசூல் செய்திருப்பதாக தங்களுக்குப் புகார் வந்திருப்பதாகவும் தெனாகா நேஷனல் கூறியுள்ளது.

தெனாகா நேஷனல் வேலையில் சேர ஆர்வமுடையவர்கள் www.tnb.com.my என்ற இணையதளத்திற்குச் சென்று விண்ணப்பம் செய்யலாம். https://emadis.tnb.com என்ற அகப் பக்கத்திலும் தங்கள் விண்ணப்பத்தைச் சேர்க்கலாம். jobstreet.com என்ற அகப்பக்கத்திற்கும் சென்று தங்கள் பெயரைப் பதிவு செய்யலாம் என தெனாகா நேஷனல் கேட்டுக் கொண்டுள்ளது.

Powered by: iSENTIA